1991 செப்டம்பர் 10]

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காமராஜர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், வ. உ. சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் அனைத்தும் பயன்பெறும் வகையில் அழகர் அணைத் திட்டம் என்ற திட்டம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திட்டம் பற்றி இருந்தால் பதில் சொல்லலாம். இன்னொரு திட்டத்திற்குப் போனால் பதில் வராது. உட்காருங்கள்.

அடுத்த வினா. வினா எண். 12, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்.

ஊராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி.

12—

*559—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட—வினாவுக்கு விடையளிப்பாரா :

அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் 'ஆம்' என்று பதில் சொல்லியதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அது எப்போது வழங்கப்படும், ஒரே ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுமா, அது கலர் டி.வி.யா, அது ஒயிட் அண்ட் பிளாக்கா அல்லது போர்ட்டபுளா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை தமிழகத்திலே இருக்கிற ஊராட்சி மன்றங்களுக்கு 12,277 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 4,494 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட இருக்கின்றன. நடப்பு நிதி ஆண்டில் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி, தமிழக முதல்வரவர்கள் சார்பில் 1991-92ஆம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலையைப் பொறுத்து சுமார் 700 கலர் டி.வி.க்களை வாங்கி, நிதி குறைவாக உள்ள ஊராட்சி

களுக்கு அளிக்கப்பட இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். மீதி உள்ளவர்களுக்கு நிதிநிலைக்கேற்ப மற்றைய ஊராட்சி மன்றங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வரவர்கள், புரட்சித் தலைவி அவர்களுடைய முகத்தைப் பார்ப்பதற்கு தமிழகத்திலே இருக்கிற கோடிக்கணக்கான தாய்மார்கள் காத்திருக்கிற நேரத் தில் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஒரு டி.வி. வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் போகும்போதும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் போகும்போதும் எங்களிடம் சொல் கிறார்கள். அந்த அடிப்படையில் என்ன சொன்னார்கள் என் றால், எல்லோரும் நேரடியாகப் பார்க்க முடியாது, ஆங்காங்கே வந்தாலும்கூட போய்ப் பார்க்க முடியாது, டி.வி.-யில் பார்த்து மகிழலாம் என்ற அடிப்படையில் டி.வி. கேட்கிறார்கள். ஒரு ஊராட்சிக்கு ஒன்று. பெரிய ஊராட்சி என்றால் 4, 5 குக் கிராமங்கள் இருக்கலாம். அதற்குத் தனித் தனியாகக் கொடுக்க வேண்டும். அதற்கு போர்ட்டபுள் டி.வி. கொடுக்கலாமா என் பதை ஆராயலாம். மேலும் முந்தைய ஆட்சிக் காலத்தில் வழங்கப் பட்ட டி.வி.க்கள் எல்லாம் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங் களின் தலைவர்கள் இல்லத்தில் இருப்பதாக நான் அறிகிறேன், புகார் வந்திருக்கிறது. அதை வைத்துக்கூட தாய்மார்கள் எல்லாம்

ஒன்றுசேர்ந்து இந்தத் தொலைக்காட்சிப் பெட்டியைப் போட வேண்டும் என்று கேட்டும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் போடாமல், அதாவது புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்பு விழாவைப் பார்க்கவேண்டுமென்று தாய் மார்கள் எல்லாம் கேட்டபோது அதைக் காண்பிக்காமல் மறுக்கப் பட்டிருக்கிறது. இப்படி அந்தத் தலைவர்கள் இல்லத்தில் இருக் கிற டி.வி. பெட்டிகளைப் பறித்து பொது இடத்தில் வைத்து நிகழ்ச்சிகளை மக்கள் பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கிராம மக்கள் எல்லாம் நகரத்தில் இருக்கிற மக்களுக்கு இணையாக பல்வேறு வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்காக தொலைக்காட்சிப் பெட்டிகள் பெரிதும் பயன்படுகிற வகையில் தொலைக்காட்சிப் பெட்டிகளை அங்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும், நடப்பு நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை இருப்ப தால் இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி கிட்டத்தட்ட 700 கலர் டி.வி. பெட்டிகள் வாங்கி ஊராட்சி மன்றங்களுக்கு வழங்க இருக்கிறோம். மேலும் ஊராட்சி மன்றங்களில் நிதி

TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 10]

வசதி இருந்தால் அவர்களே தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொள்ளலாம் என்று அரசு குறிப்பு இருக்கிற காரணத்தால் டி.வி. இல்லாத கிராமங்களுக்கு அரசு விரைவில் வாங்கி வழங்க தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைக் கலந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டிகளை, புரட்சித் தலைவர் அவர்கள் கிராமங்களில் உள்ள மக்களுக்குக் கொடுத்த பிறகு தான் கிராம மக்களுக்குப் பொது அறிவு வளர்வதற்கும், அன்றாட செய்திகளை உடனே தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அது ஒரு முக்கியமான விஷயமாக இருப்பதால் ஊராட்சி மன்றங்கள் அமைந்து இருக்கும் இடங்களில் மட்டும் கொடுக்காமல், ஊராட்சியில் இருக்கிற அத்தனை குக்கிராமங்களுக்கும் டி.வி. பெட்டிகள் கொடுக்கிற திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் விரிவுபடுத்தவில்லையே தவிர, அரசுக்கு எல்லா குக்கிராமங்களுக்கும் டி.வி. பெட்டிகள் வழங்கவேண்டுமென்ற உணர்வு இருக்கிற காரணத்தால், நிதிநிலைக்கேற்ப இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி ஜி. மல்லிகா.

செல்வி ஜி. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் புரட்சித் தலைவியின் புரட்சிகரமான இந்தத் திட்டத்தின்படி, உள்ளாட்சியில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைப்பதைவிட, ஆதிதிராவிட மக்கள் வாழும் காலனிகளில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம மக்களுக்குப் பொதுவான இடத்தில் டி.வி. பெட்டிகள் வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று நிதி வசதி இருந்தால் அந்தப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

[1991 செப்டம்பர் 10

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஊராட்சி மன்றத்திற்கு வழங்கினால், அந்த ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வைத்துக் கொண்டால் மக்களுக்குப் பயன் இருக்காது. முன்பு வானொலி நிலையங்கள் என்று ஒவ்வொரு கிராமத்திற்கும் கட்டிக் கொடுத்து இருந்தார்கள். அதுமாதிரி இடத்தில் வைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சி மன்றத்தில் மன்ற அலுவலகங்கள் இருக்கும் இடத்தில் வைக்கவேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. முன்பெல்லாம் வானொலிப் பெட்டிகள் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. அப்படி வைப்பதற்கு நிதி வசதி இல்லாததனால்தான் பொதுவான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி நிதியிலிருந்துதான் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவேண்டுமென்று விதி இருந்து வருகிறது. அந்த விதியை மாற்றி அரசு தொகுப்பு நிதியிலிருந்து, அதாவது புரட்சித் தலைவி ஆட்சி பல கோடி ரூபாய் பற்றாக்குறை வந்தாலும் அஞ்சாத ஆட்சியாக இருக்கிற காரணத்தால், இதற்கு சில கோடிகளை ஒதுக்கி, அரசு தொகுப்பு நிதியிலிருந்து வழங்க ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒதுக்கியிருக்கிற ஒரு கோடி ரூபாயும் அரசு நிதியிலிருந்துதான் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 13. திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்.

வேலூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

13—

*502— திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் துவங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும் ?